டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 21.01.2026 புதன்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 176 - Madurai | Online Edition

# கடல் உணவு ஏற்றுமதி மேம்பாடு குறித்த மாநாடு இன்று புதுதில்லியில் நடைபெறவுள்ளது

புது தில்லி, ஜன.20

கடல் உணவு ஏற்றுமதி மேம்பாடு குறித்து தூதர்கள் மற்றும் துணைத் தூதர்களுடனான வட்டமேஜை மாநாட்டிற்கு மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் மீன்வளத்துறை ஏற்பாடு செய்துள்ளது. புதுதில்லியில் இன்று (21.01.26) நடைபெறவுள்ள இம்மாநாடு இருதரப்பு வர்த்தகம், சர்வதேச சந்தை இணைப்பு ஆகியவற்றை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் மத்திய மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு, பால்வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் தலைமை தாங்குகிறார். இணையமைச்சர்கள் ஜார்ஜ் குரியன், பேராசிரியர் எஸ் பி சிங் பாகல் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இம்மாநாட்டில் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, வட அமெரிக்கா, ஓசியானியா, லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் பகுதிகளைச் சேர்ந்த 83 கூட்டாண்மை நாடுகளின் தூதர்கள் மற்றும் துணைத்தூதர்கள் பங்கேற்க உள்ளனர். வெளியுறவு அமைச்சகம், மீன்வளத்துறை, கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், ஏற்றுமதி ஆய்வுக் குழுமம், வர்த்தகத் துறை, வெளிநாட்டு வர்த்தக தலைமை இயக்குநரகம், உணவுப் பதப்படுத்துதல் தொழில் துறை அமைச்சகம் மற்றும் உணவு மற்றும் வேளாண் அமைப்புப் போன்ற சர்வதேச முகமைகளின் உயர் அதிகாரிகளும் பங்கேற்க உள்ளனர்.

மதிப்புக் கூட்டப்பட்ட கடல் உணவு வர்த்தகம் உள்ளிட்ட கடல் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துதல், முதலீடு, கூட்டாண்மை தொழில்நுட்பப் பரிமாற்றம், திறன் கட்டமைப்பு ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் குறித்து மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

மீன் மற்றும் அது சார்ந்த உணவுப் பொருட்களின் ஏற்றுமதியில் இந்தியா தற்போது 6-வது மிகப்பெரிய ஏற்றுமதியாளராக உள்ளது. 2024-25-ம் ஆண்டு 16.98 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு ரூ.62,408 கோடி மதிப்பிலான கடல் உணவு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது இந்தியாவின் மொத்த வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் சுமார் 18 சதவீதமாகும்.

# விவசாய கலந்தாய்வு கூட்டத்தில் பங்கேற்ற வேளாண் கல்லூரி மாணவிகள்

விருதுநகர், ஜன.20

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி தலைமையில் விவசாய கலந்தாய்வு கூட்டம் சொக்கநாத புரத்தில் நடைபெற்றது. கிள்ளிகுளம் வ.உ.சி. வேளாண்மை கல்லூரி 4-ம் ஆண்டு மாணவிகளும் கலந்து கொண்டனர்.



அக்கூட்டத்தில் மாணவிகள் உழவன் செயலியைப் பற்றி விவரித்தனர். அதில் உள்ள மானியத் திட்டங்கள், உரங்கள் இருப்பு நிலை, விதை இருப்பு நிலை, சந்தை விலை நிலவரம், இயற்கை விவசாய விளைபொருட்கள் பற்றிக் கூறினார். விவசாயிகளின் மண் வளத்தை அறியும் முறையைப் பற்றி கூறினார்கள். அதன்பின் மண் அறிவியலாளர் மண்ணின் அமில நிலை, உப்புத்தன்மை மற்றும் கரிமக் கார்பன் அளவின் விளக்கங்களைத் தெரிவித்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதி பற்றி அறிய வேண்டுமா? ஓர் அரிய வாய்ப்பு!

கோயம்புத்தூர், ஜன.20

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதி வாய்ப்புகள் குறித்த பயிற்சி இரண்டு நாட்கள் வழங்கப் படவிருக்கின்றது. இப்பயிற்சியில் உழவர்கள், உழவர் உற்பத்தி யாளர் நிறுவனங்கள், மகளிர், இறுதி ஆண்டு பட்டதாரி மாணவ, மாணவியர்கள், இதர பட்டதாரிகள், இளைஞர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் பங்கு பெறலாம்.

இப்பயிற்சி வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக வளாகத்தில் வரும் 03.02.26 மற்றும் 04.02.26 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

பயிற்சி கட்டணம் நபர் ஒருவருக்கு ரூ.3540/- (சரக்கு மற்றும் சேவை வரி 18 விழுக்காடு உள்பட). பயிற்சிக்கு குறைந்த எண்ணிகையிலான இடங்களே உள்ளன.

**பதிவுக்கு தொடர்பு கொள்ள :**

மின்னஞ்சல் : business@tnau.ac.in

தொலைபேசி எண் : 0422 - 6611310

கைபேசி எண் : 82206 61228.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!






அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# ஆனந்தி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் வேளாண் கல்லூரி மாணவர்களின் பயில் விழா



நாமக்கல், ஜன.20

நாமக்கல், மாவட்டம், மல்லசமுத்திரம் தொகுதிக்குள்பட்ட கொட்டாபாளையம் கிராமத்தில் செயல்பட்டு வரும் 'ஆனந்தி டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிட்டெட்' பருத்தி நெய்தற் தொழிற்சாலைக்கு PGP வேளாண் கல்லூரி மாணவர்கள் சென்று தொழில்நுட்ப பயிற்சி பெற்றனர்.

இப்பயில்விழாவில் மாணவர்களுக்கு ஆற்காட்டன் (Organic Cotton) விளைச்சல் முறைகள், சான்றிதழ் பெறும் நடைமுறை, விதைத் தேர்வு, நார்தரம் பாதுகாப்பு, அறுவடைப் பிந்தைய செயல்முறை போன்றவை விரிவாக விளக்கப்பட்டன. மேலும் ஆற்காட்டனில் இருந்து துணி தயாராகும் வரை நடைபெறும் சுத்திகரிப்பு, சுழல், நெய்தல் போன்ற தொழில்நுட்ப கட்டங்களையும் மாணவர்கள் நேரில் கண்டு கற்றுக் கொண்டனர்.

ஆனந்தி டெக்ஸ்டைல்ஸ் நிறுவன பொறியாளர்கள், ஆற்காட்டன் பயிரிடும் முக்கியத்துவம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, விவசாயிகளுக்கு கிடைக்கும் வருமான நன்மைகள் உள்ளிட்டவை பற்றியும் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

PGP வேளாண் கல்லூரி ஆசிரியர்கள், விவசாய மாணவர்கள் தொழில்துறை சம்பந்தமான இத்தகைய நேரடி கற்றல் வாய்ப்புகள் மூலம் பயிரிடுதல் முதல் தயாரிப்பு வரை முழுச் சங்கிலியையும் புரிந்து கொள்ளலாம் என தெரிவித்தனர்.

கொட்டாபாளையம் பகுதியில் நடைபெற்ற இந்த தொழில் துறை பயில்விழா, மாணவர்களுக்கு நடைமுறை அறிவை அதிகரித்ததோடு, ஆற்காட்டன் வளர்ப்பு குறித்து புதுமையான ஆர்வத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

**அன்புடையீர்,**

நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# உரம் வாங்கும் போது கட்டாயப்படுத்தி இணைப் பொருட்களை கொடுக்கக் கூடாது என எச்சரிக்கை



பெரம்பலூர், ஜன.20

பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் கண்ணனின் அறிவுரையின்படி வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு டாக்டர் அக்ரி ராதாகிருஷ்ணன், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள உரம் விற்பனை நிலையங்களை திடீர் ஆய்வு செய்தார். ஆய்வின் போது உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயியின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக் கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும்.

எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக்கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். தழைச்சத்துக்காக யூரியாவுக்கு பதிலாக நானோ யூரியா பயன்படுத்தலாம். வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதாகிருஷ்ணன் கூறினார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வேளாண் கல்லூரி மாணவிகளின் சார்பில் தேசிய இளைஞர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது



விருதுநகர், ஜன.20

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரம், ம.ரெட்டியப்பட்டியில் அமைந்துள்ள அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் தேசிய இளைஞர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே உள்ள பேரையூர் நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவிகள், ஊரக வேளாண் அனுபவப் பயிற்சி (யூபுநிசி) திட்டத்தின் ஒரு பகுதியாக இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து நடத்தினர். நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் தலைமை வகித்தார். சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளான ஜனவரி 12 ஆம் நாள் தேசிய இளைஞர் தினமாகக் கொண்டாடப்படுவதன் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள், கொள்கைகள் மற்றும் இளை-ஞர்களுக்கான அவரது ஊக்கமூட்டும் கருத்துகள் நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகின்றன என்பதையும் மாணவிகள் விளக்கினர்.

இன்றைய மாணவச் செல்வங்களே நாளைய நாட்டின் இளைஞர் சக்தி – என்பதனை வலியுறுத்திய மாணவிகள், இளைஞர்களின் பங்கு வேளாண்மையில் மிகவும் முக்கியமானது எனக் கூறினர். குறிப்பாக, இயற்கை விவசாயத்தை மேம்படுத்துவதில் இளை-ஞர்கள் முன்னணியில் நிற்க வேண்டும் என்றும், நவீன தொழில்நுட்பங்களை பாரம்பரிய இயற்கை விவசாய முறைகளுடன் இணைத்து புதிய வேளாண் புரட்சியை உருவாக்க வேண்டிய பொறுப்பு இளம் தலைமுறையினருக்கே உள்ளது என்றும் எடுத்துரைத்தனர்.

மேலும், வளம் குன்றா வேளாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்ய இயற்கை விவசாயம் இன்றியமையாதது என்றும், அதனை வளர்த்தெடுக்க இளைஞர் சமுதாயத்தின் பங்களிப்பு மிக அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மாணவர்களிடையே இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாக அமைந்தது.

நிகழ்ச்சியின் இறுதியாக, இயற்கை விவசாயத்தையும் பசுமை வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் வகையில் பள்ளி மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சி மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும், எதிர்கால வேளாண் வளர்ச்சிக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்தது.



# தென்னையில் காண்டாமிருக வண்டின் கட்டுப்பாடு பற்றி வேளாண் கல்லூரி மாணவர்கள் விளக்கம்



நாமக்கல், ஜன.20


நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் வட்டாரத்தில் பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் தென்னையை பாதிக்கக்கூடிய காண்டாமிருக வண்டின் அறிகுறிகள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் தொடர்பான விளம்பரங்களை விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.

**அறிகுறிகள் :** நடுக்குருத்து வெட்டுப்பட்டிருக்கும் அல்லது ஒன்றாக சேர்ந் திருக்கும். நன்றாக வளர்ந்த ஓலைகள் வைரம் போன்ற வடிவில் வெட்டுக்கள் காணப்படும். நடுக்குருத்தின் அடிப்பகுதியில் உள்ள துளைகளில் உண்ணப்பட்ட நார்கள் ஒட்டிக் கொண்டிருக்கும்.

**கட்டுப்பாடு :** இறந்த மரங்களைத் தோப்புகளிலிருந்து அகற்றி எரித்தவிடல் வேண்டும். ஏனெனில் அவைகள் வண்டினம் இனப்பெருக்கத்துக்கு உகந்த இடமாகிவிடுகிறது. தொழு உரத்தை குழிகளிலிருந்து எடுக்கும் பொது அவற்றிலிரக்கும் புழுக்கள் மற்றம் கூட்டுப் புழுக் களைச் சேகரித்து அழித்துவிட வேண்டும். புழுக்களை உண்டு அழிக்கம் பூஞ்சாணத்தை (மெட்டாரைசியம் அனிசோ பிலியே) எருக் குழிகளில் கலந்து விடவேண்டும். இவ்வகைப் பூஞ்சாணம் அரசு உயிரியல் ஆய்வகங்களில் வளர்க்கப்படுகிறது.

தென்னங்கன்றுகளில் அடிப்பாகத்தில் பண்ணாடைகளின் உட் பகுதியில் மூன்றரை கிராம் எடையுள்ள மூன்று பூச்சிக் குண்டுகளை (பாச்சை உருண்டைகளை (அ) அந்துப் பூச்சி உருண்டைகளை) ஒரு கன்றுக்கு என்ற அளவில் 45 நாட்களுக்கு ஒரு முறை வைத்து கன்றுகளை வண்டின் தாக்குதலிலிருந்துத் தவிர்க்கலாம். விளக்கு பொறியை முதல் கோடைமழை சமயங்களில் மற்றும் பருவமழைக் காலங்களிலும் அமைத்துக் கவர்ந்தழிக்கலாம்.

வேப்பங்கொட்டைத் தூள் அல்லது வேம்பு பருப்புத் தூள் 150 கிராமுடன் இரண்டு மடங்கு மணலைக் கலந்து மடல் பகுதிகளில் உள்ளிருந்த மூன்றாவது மட்டைகளின் அடிப்பகுதியில் பண்ணா டைகளுக்கு இடையில் வைப்பதன் மூலம் வண்டுகளால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்கலாம். ரைனோலூர் (Rhinolure) இனக்கவர்ச்சிப் பொளிகளை இரண்டு எக்டருக்கு ஒன்று வீதம் வைத்து வண்டு களைக் கவர்ந்து அழிக்கவும்.



கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# கொய்யா பழத்தை பாதுகாக்க உதவும் பயோ- பிளாஸ்டிக் பைகள்



தற்போது கொய்யா பழங்களின் சீசன் ஆரம்பித்து விட்டது. கொய்யா மரத்திலிருந்து விவசாயிகளால் முழுமையாக பழங்களை பறிக்க இயலாத நிலையில் தான் உள்ளனர். ஒரு புறம் அணில், பறவைகள் தாக்குதல், மறுபுறம் பழ ஈக்கள், தேயிலை கொசுக்கள் தாக்குதல். 10 பழங்கள் ஒரு மரத்தில் இருந்தால் முழுமையான பழமாக 3 தான் இருக்கிறது. இந்த பூச்சி / நோய்களால் பழச்சாற்றை உறிஞ்சி காய்களில் கடின மான கருப்பு புள்ளிகள் (BLACK SPOT) உண்டாகி விளைச் சலையும் தரத்தையும் குறைப்பதால் நல்ல விலை இருந்தும் மார்கெட்டில் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. இதனால் விவசாயிகளின் வருமானம் பாதிக்கப்படுவதுடன் வாழ்வா தாரமும் பாதிக்கிறது. இத்தகைய பாதிப்புகளை தடுக்க ஓட்டன் சத்திரம் ஆயக்குடி விவசாயிகள் பழங்களை பாதுகாப்பாக இருப்பதற்கு 'பயோ பைகள் (BIO- BAG) பயன்படுத்த தொடங்கி உள்ளனர். இதை போல கொய்யா விவசாயிகள் அனைவரும் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் இந்த பைகளைக் கொண்டு பழங்களை மூடி பாதுகாப்பாக வைக்கலாம்.

## பயோ பைகள் என்றால் என்ன?

எளிதில் மக்க கூடிய இயற்கையான முறையில் தயாரிக்கப் பட்ட பைகளாகும். இந்த பைகள் தலா ஒன்று ரூபாய் 2-3க்கு மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. இதை சரியாக கையாண்டால் மறுபடியும் இதனை பயன்படுத்த முடியும். பழங்களை சுற்றி பாதுகாப்பு கவராக இருப்பதால் பழங்கள் முழுமையாகவும் பிரஷ்யாகவும் சேதாரமின்றி பறித்து விற்பனைக்கு அனுப்பலாம்.

இந்த புதிய உத்தியின் மூலமாக விவசாயிகள் தரமான கொய்யா பழங்களை அறுவடை செய்ய முடியும் என்ற நம்பிக்கை விவசாயிகள் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்த பையை நிலத்தில் இட்டால் எளிதாக மக்கும். மண்ணுக்கு எவ்வித கேடும் விளைவிக்காது. அதே நேரத்தில சுற்றுச்சூழல் பாதுகாப்பதுடன் பறவைகள் அணில் கடித்து சேதாரமாக்குவதை தடுக்கிறது. என்ன பயோ பைகள் வாங்க கிளம்பியச்சா, கொய்யா விவசாயிககளே!.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# இயற்கை பண்ணை மற்றும் அரிசி ஆலையை பார்வையிட்ட வேளாண்மை கல்லூரி மாணவிகள்

பெரம்பலூர், ஜன.20

பெரம்பலூர் மாவட்டம், நாளந்தா வேளாண்மை கல்லூரி மாணவிகள், தங்களது கல்வி மற்றும் புலப்பயிற்சியின் ஒரு பகுதியாக, செந்தமிழ் இயற்கை பண்ணை மற்றும் அதனுடன் இணைந்த அரிசி ஆலையை நேரில் பார்வையிட்டனர்.

இந்த பயிற்சி பயணத்தின் போது, தமிழகத்தின் பாரம்பரிய நெல் வகைகள் குறித்த விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன. குறிப்பாக கருங்குறுவை, காட்டு யானம், மாப்பிள்ளை சம்பா, செம்பொன் சம்பா, சீரக சம்பா, பூங்கார், கொடைவழை, கிச்சிலி சம்பா உள்ளிட்ட பல அரிய பாரம்பரிய அரிசி வகைகள் மாணவிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வகை நெற்கள் நீர்சிக்கன சாகுபடி, நோய் எதிர்ப்பு திறன் மற்றும் அதிக ஊட்டச்சத்து கொண்டவை என்பதையும் விவசாயிகள் விளக்கினர்.

மேலும், பண்ணை உரிமையாளர்களான ஆறுமுகம் மற்றும் போதிபகவன் ஆகியோர், சினி (Effective Microorganisms) கரைசல் மற்றும் மீன் அமிலம் (Fish Amino Acid) தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்தும் மாணவிகளுக்கு விரிவான விளக்கங்களை வழங்கினர். சினி கரைசல் என்பது பயனுள்ள நுண்ணுயிர்கள் அடங்கிய உயிரியல் கரைசலாகும். இதனை மண்ணில் மற்றும் பயிர்களில் பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் உயிர்சத்து அதிகரித்து, கரிமப் பொருட்கள் விரைவாக சிதைவடையும் என்றும், பயிர்களின் வேர் வளர்ச்சி மற்றும் நோய் எதிர்ப்பு திறன் மேம்படும் என்றும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

அதேபோல், மீன் கழிவுகள் மற்றும் வெல்லம் கொண்டு தயாரிக்கப்படும் மீன் அமிலம் இயற்கை வளர்ச்சி ஊக்கியாக செயல்படுகிறது என்றும், இதில் உள்ள அமினோ அமிலங்கள் மற்றும் நைட்ரஜன் தழை வளர்ச்சியை அதிகரித்து, பயிர்களின் வளர்ச்சியும் விளைச்சல் தரமும் மேம்பட உதவுகிறது என்றும் விளக்கினர். குறிப்பாக இயற்கை விவசாயத்தில் ரசாயன உரங் களுக்கு மாற்றாக சினி கரைசல் மற்றும் மீன் அமிலம் முக்கிய பங்கு வகிப்பதாகவும், குறைந்த செலவில் நிலையான விவசாயத்தை மேற்கொள்ள முடியும் என்றும் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.



மேலும், இயற்கை விவசாய முறைகள் குறித்து மாணவிகள் நேரடியாக கற்றுக் கொண்டனர். ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் இல்லாமல், பஞ்சகவ்யா, ஜீவாமிர்தம், அமிர்த கரைசல், பசுந்தழை உரம் போன்ற உயிரியல் உள்ளீடுகள் பயன்படுத்தப்படும் முறைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

பாரம்பரிய விதைகளை பாதுகாப்பது, விதை தேர்வு, விதை சேமிப்பு முறைகள் குறித்தும் செய்முறை விளக்கங்கள் வழங்கப் பட்டன. அரிசி ஆலையில், நெல்லை அரிசியாக மாற்றும் செயல் முறை முழுமையாக எடுத்துரைக்கப்பட்டது. நெல் சுத்திகரிப்பு, உலர்த்தல், அரைத்தல், பாலிஷ் செய்யாமல் அரிசியை தயாரித்தல், ஊட்டச்சத்து இழப்பில்லாத பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நடைமுறைகள் குறித்து மாணவிகள் கவனித்து அறிந்தனர். குறிப்பாக பாரம்பரிய அரிசிகளுக்கு உள்ள உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தை தேவை குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

பண்ணையில் நடைபெற்ற விளக்கத்தின் போது, தக்கப்புண்டு, சன்னகம்பு போன்ற பசுந்தழை பயிர்களை சாகுபடி செய்து மண்ணில் கலப்பதன் மூலம் மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதி ஆண்டு மாணவிகளான வ.கிருபாலினி, தி.ஜீவிதா, ரா.கவியா, ம.காவ்யா, செ. காயத்திரி, பா.கீர்த்திகா, மு.கிருத்திகா மற்றும் தி.மீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நெல்லுக்குப் பின் பயறு சாகுபடி முறைகள்

நெல் அறுவடைக்கு பின் நிலத்தில் இருக்கும் மீதமுள்ள ஈரப்பதத்தை (Residual soil moisture) பயன்படுத்தி, எந்த உழவு அல்லது மிகக்குறைந்த உழவுடன் பயிரிடப்படும் பயறு வகைகள் தான் நெல் பின் சாகுபடி பயறு வகைகள் எனப்படுகின்றன.

**முக்கிய பயிர்கள்**

உளுந்து பாசிப்பயறு கொள்ளு துவரை ஆகிய பயிர்கள் உகந்தவையாகும்.



**சாகுபடி முறை**

1. நெல் அறுவடைக்கு 7–10 நாட்களுக்கு முன் அல்லது அறுவடை உடனே விதைப்பு செய்தல்(பொதுவாக : ஜனவரி – பிப்ரவரி)

2. பெரும்பாலும் தூவு விதைப்பு (Broadcasting) முறை

3. உழவு செய்யாமல் அல்லது குறைந்த உழவுடன் சாகுபடி

**பரிந்துரைக்கப்படும் ரகங்கள்**

**1. உளுந்து**
VBN 6 VBN 8 VBN 10 ஆகிய ரகங்கள்
**2. பாசிப்பயறு**
VBN 2 CO 8 CO (Gg) 7 ஆகிய ரகங்கள்

**விதை அளவு**
உளுந்து : 20–25 கிலோ / ஹெக்டேர்
பாசிப்பயறு : 18–20 கிலோ / ஹெக்டேர்

**விதை நேர்த்தி**
ரைசோபியம் கலவை – 600 கிராம் / ஹெக்டேர்
பாஸ்போபாக்டீரியா – 600 கிராம் / ஹெக்டேர்

**காலநிலை & மண்**
மணல் கலந்த அல்லது நடுத்தர கரிசல் மண் உகந்தது மற்றும் நீர் தேங்காத நிலம் சிறந்தது.

**உர மேலாண்மை**
பொதுவாக வேதியுரம் தேவையில்லை. விதைப்புக்கு முன் ரைசோபியம் கலவை மூலம் விதை நேர்த்தி செய்தால் நல்ல விளைச்சல் பெறலாம். மண்ணின் நைட்ரஜன் அளவு அதிகரிக்கும்.

**பூச்சி & நோய் மேலாண்மை**
1. விதை நேர்த்தி : இமிடாக்லோப்ரிட் (அல்லது) டைமேதோயேட் ÷ விதைக்கு 5 மி.லி/கிலோ
2. மலர்ப் பூத்தல் மற்றும் காய் வளர்ச்சி நிலையில் 0.03% அசடிராக்டின் தெளிக்கவும்.
3. வெள்ளை ஈ (whitefly) கட்டுப்படுத்த இமிடாக்ளோப்ரிட் 4 மி.லி / லி தெளிக்கவும்.
4. வேர் பாக்டீரியா சிதைவு கட்டுப்படுத்துவதற்காக சூடோமோனாஸ் விதைக்கு 10 கிராம்/கி.கி விதை நேர்த்தி செய்யவும்.

**விளைச்சல்**

ஹெக்டேருக்கு சுமார் 300–600 கிலோ
குறுகியகால பயிர்கள் (65–75 நாட்கள்)

குறுகியகால பயிர்கள் (65-75 நாட்கள்)

**நன்மைகள்**

1. குறைந்த செலவில் – அதிக லாபம் பெறலாம்
2. கூடுதல் பாசனம் தேவையில்லை
3. மண்வளம் மேம்படும்
4. நெல் – பயறு சுழற்சி மூலம் நீடித்த விவசாயம்
5. விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம்

மேலும், விதைகளின் முளைப்புத்திறனை துல்லியமாக அறிந்து கொள்ள, சிவகங்கை – தொண்டி சாலையில் அமைந்துள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் ரூ.80/– செலுத்தி விதைகளின் தரத்தை அறிந்து பயிடுவதன் மூலம் நல்ல மகசூல் பெறலாம்.

இதனை, **சி.சிவகாமி, விதைப்பரிசோதனை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், மதுரை மற்றும் ச.பாலகணபதி, வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், சிவகங்கை தெரிவித்தனர்.**

# உழவர் திருநாள் விழாவில் வேளாண் கல்லூரி மாணவிகள் பங்கேற்பு



தஞ்சாவூர், ஜன.20

தமிழ்நாடு அரசு வேளாண்மை உழவர் நலத்துறை திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் சங்கம் தஞ்சாவூர் மாவட்டம், பாரத ஸ்டேட் வங்கி நீடாமங்கலம் கிளை, தலைமையில் கோவில்வெண்ணியில் உழவர் திருநாள் விழா ஜனவரி 17, 2026 அன்று நடைபெற்றது. அதில் அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள், பிற கல்லூரி மாணவ மாணவிகளும் மற்றும் விவசாயிகளும் பங்கேற்றனர். Dr. இளஞ்செழியன் வருகை தந்த இயக்குனர்களுக்கும் விவசாயிகளுக்கும் பொன்னாடையிட்டு கௌரவித்தனர். ஓய்வு பெற்ற உதவி வேளாண்மை இயக்குனர் கலியமூர்த்தி இயற்கை விவசாய முறையை பற்றி மாணவ மாணவிகளுக்கும் விவசாயிகளுக்கும் எடுத்துரைத்தனர். மேலும் னியூம் தேன் பண்ணையில் இருந்து வருகை தந்து தேன் வளர்ப்பு முறையைப் பற்றி விளக்கமளித்தனர். இவ்விழாவில் மாணவர், மாணவிகள் பங்கேற்று பயனடைந்தனர்.

# இப்கோ நானோ யூரியா பிளஸ் - ஓர் பார்வை

நானோ யூரியா பிளஸ் 20% தழைச்சத்து கொண்டது. பயிர் களுக்கு தேவையான தழைச்சத்தை திறம்பட பூர்த்தி செய்து, பயரின் வளர்ச்சியை அதிகரிக்கும். மேலும் நுண்ணூட்டச் சத்துக்களின் செயல்திறன் மற்றும் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கும்.




## பயன்படுத்தும் முறை

(ஒரு மூடி நானோ யூரியா பிளஸ் பாட்டிலின் அளவு = 25 மி. லி.)

| பயிர்வகைகள் | முதல்தெளிப்பு | 2-ஆம்தெளிப்பு | 3-ஆம்தெளிப்பு |
|---|---|---|---|
| தானியப் பயிர்கள் | நடவு செய்த 20-25 நாட்களில் (அ) முளைத்த 30-35 நாட்களில் | நடவு செய்த 45-55 நாட்களில் (அ) முளைத்த 50-60 நாட்களில் (பூக்கும் பருவத்திற்கு முன்) | தழைச்சத்து தேவைக்கேற்ப 3-ஆம் தெளிப்பு தெளிக்கவும் |
| பருப்பு வகை பயிர்கள் | முளைத்த 30-35 நாட்களில் (கிளைப்பு பருவம்) | அதிக தழைச்சத்து தேவைப்படும் பயிர்களில் வளரும் பருவத்திற்கேற்ப அளவுமாறுபடும் | |
| எண்ணெய் வித்துக்கள் | முளைத்த 30-35 நாட்களில் (கிளைப்பு பருவம்) | முளைத்த 50-60 நாட்களில் (பூக்கும் பருவத்திற்கு முன்) | |
| காய்கறிகள் | நடவு செய்த20-25 நாட்களில் (கிளைப்பு பருவம்) | நடவு செய்த 40-50 நாட்களில் (அ) முளைத்த 50-60 நாட்களில் (பூக்கும் பருவத்திற்கு முன்) | |
| பருத்தி | முளைத்த 30-35 நாட்களில் (கிளைப்பு பருவம்) | முளைத்த 50-60 நாட்களில் (பூக்கும் பருவத்திற்கு முன்) | முளைத்த 80-90 நாட்களில் (காய்க்கும் பருவம்) |
| கரும்பு | நடவுசெய்த45-60 நாட்களில் (கிளைப்புபருவம்) | நடவுசெய்த75-80 நாட்களில் | நடவு செய்த 100-110 நாட்களில் (வளர்ச்சி பருவம்) |
| பழம் மற்றும் பூ வகை பயிர்கள் | தழைச்சத்து தேவைக்கேற்ப 1-3 தெளிப்புகளை பூக்கும் முன், காய் உருவாகும் ஆரம்ப நிலை மற்றும் காய் வளரும் பருவங்களில் பயன்படுத்தவும். | | |
| தேயிலை மற்றும் தோட்ட பயிர்கள் | 2-3 மாத இடைவெளியில் பயிரின் தழைச்சத்து தேவைக் கேற்ப ஒவ்வொரு அறுவடைக்குபின் தெளிக்கவும். | | |

Rithvik Pipe

IS 4985 : 2021

IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# அனுமதி பெறாமல் கலப்பு உரங்களை விற்றால் உர விற்பனை உரிமம் இரத்து

## வேளாண்மை இணை இயக்குநர் எச்சரிக்கை

புதுக்கோட்டை, ஜன.20

புதுக்கோட்டை மாவட்ட உர விற்பனையாளர்கள் உரங்கள் இருப்பு மற்றும் விலை விவர பலகையை தினந்தோறும் பராமரிக்க வேண்டும் என வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

**உர இருப்பு விபரம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிர், மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, கரும்பு, தென்னை, காய்கறிகள், மா, வாழை மற்றும் மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களுக்கு தேவையான உரங்கள் மாவட்டத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பயிர் சாகுபடிக்கு தேவையான இரசாயன உரங்களான யூரியா 5079 மெட்ரிக் டன்கள், டிஏபி 1560 மெட்ரிக் டன்கள், பொட்டாஷ் 1570 மெட்ரிக் டன்கள், காம்ப்ளக்ஸ் 5502 மெட்ரிக் டன்கள் மற்றும் சூப்பர் பாஸ்பேட் 866 மெட்ரிக் டன்கள் ஆகியன தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**உர உரிமம் பெற்ற மொத்தம் மற்றும் சில்லரை விற்பனை யாளர்கள் கவனத்திற்கு**

● மானிய உரங்களை பிற மாவட்டங்களுக்கு அனுப்புவதோ, பிற மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்யவோ கூடாது.

● விவசாயம் அல்லாத பிற பயன்பாட்டிற்கு மானிய உரங்களை வழங்கக்கூடாது.

● உர விற்பனை உரிமத்தில் அனுமதி பெற்ற நிறுவனங்களிட மிருந்து கொள்முதல் செய்து, அனுமதி பெற்ற இடங்களில் மட்டுமே இருப்பு வைத்து விற்பனை செய்திட வேண்டும்.

● உரிமத்தில் அனுமதி பெறாமல் கலப்பு உரங்களை இருப்பு வைத்து விற்பனை செய்தல் கூடாது.

● உர மூட்டையின் மேல் அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்யக்கூடாது.

● விற்பனை நிலையத்தில் உர இருப்பு மற்றும் விலை விபர பலகையினை விவசாயிகளின் பார்வையில் படும்படி வைத்து தினசரி பராமரிக்கப்பட வேண்டும்.

● உரங்களை விற்பனை முனையக் கருவி மூலம் மட்டும் விற்பனை செய்திட வேண்டும்.

● விவசாயிகளுக்கு தேவையற்ற இடுபொருட்களை இணைத்து விற்பனை செய்யக்கூடாது.

● தரமற்ற மற்றும் போலியான உரங்களை விற்பனை செய்தல் கூடாது.

● விவசாயிகளுக்கு தேவைக்கு அதிகமாக உரங்களை விநியோகம் செய்யக்கூடாது.

மேலும், விவசாயிகளுக்கு தரமான உரங்கள் விநியோகம் செய்யப்படுகிறதா என உர ஆய்வாளர்கள் திடீர் ஆய்வு மேற் கொள்ளும் பொழுது, உரங்களை, அதிக விலைக்கு விற்பனை செய்தல், விவசாயம் அல்லாத தேவைகளுக்கு மானிய உரங்களை விற்பனை செய்தல், உரம் கடத்தல், பதுக்கல் ஆகிய செயல்களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் அத்தியாவாசிய பண்டங்கள் சட்டம் - 1955 உரக்கட்டுபாட்டு ஆணை - 1985 மற்றும் உர நகர்வு கட்டுப்பாட்டு ஆணை 1973 ஆகியவற்றின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மீறினால் உர உரிமம் இரத்து செய்யப்படும் எனவும் எச்சரிக்கப்படுகிறது என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.




# நவீன வேளாண்மையில் அறுவடைக்குப் பிந்தைய பாதுகாப்பு முறைகள்

முதிர்ச்சி அடைந்த பயிர் பாகங்களை அறுவடை செய்யும் முறையானது பயிருக்கு பயிர் மாறுபடும். பயிறு வகைகளை முழுப்பயிராக அறுவடை செய்கிறோம். தானியப் பயிர்களை கதிர்களை மட்டும் அறுவடை செய்கிறோம். பல்லாண்டு பயிர்களில் காய், கனிகளை மட்டும் அறுவடை செய்கிறோம். காய்கறி, பருத்தி போன்ற பயிர்களில் கால இடைவெளியில் அறுவடை செய்கிறோம்.

**விதை பிரித்தெடுத்தல்**

மனித மற்றும் இயந்திர சக்திகளைப் பயன்படுத்தி முதிர்ந்த காய்கனிகள் மற்றும் கதிர் பாகங்களில் இருந்து விதைகள் பிரித்தெடுக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக கதிரடிக்கும் இயந்திரம், நிலக்கடலை விதை பிரிப்பான் போன்ற இயந்திரங்களைக் காட்டலாம். விதைகளைத் தூற்றி சுத்தம் செய்து தரம் பிரித்தல்.

**தூற்றுதல்**

அறுவடைக்குப் பிறகு பிரித்தெடுக்கப் பட்ட தானியங்களில் உள்ள அடர்த்தி குறைவான தூசு மற்றும் குப்பைகளை காற்றின் மூலம் பிரித்தெடுக்கும் முறை தூற்றுதல் எனப்படும். தூற்றுவதற்கு இயற்கையான அல்லது செயற்கையாக உருவாக்கப்பட்ட காற்று பயன்படுத்தப்படுகிறது.

**சுத்தம் செய்தல்**

தூற்றிய விதைகளில் உள்ள கற்கள், மண் கட்டிகள் போன்ற தேவையற்ற பொருட்களை சல்லடையின் உதவி கொண்டு சலித்துப் பிரித்தலுக்கு சுத்தம் செய்தல் என்று பெயர்.

**தரம் பிரித்தல்**

சுத்தம் செய்த விதைகளில் உள்ள முதிராத, உடைந்த, நோய் தாக்கிய விதைகளை பிரித்தெடுக்கும் முறை தரம் பிரித்தல் எனப் படும். இதற்கு வெவ்வேறு கண் அளவுள்ள சல்லடைகள் பயன்படு கிறது. விதைகளை தூற்றி சுத்தம் செய்து தரம் பிரிக்க கிரிப்பன் வகை சுத்தப்படுத்தி மற்றும் தரம் பிரிக்கும் சாதனம் பயன்படுத்தப் படுகிறது.

**உலர்த்துதல்**

விதையின் தரம் மற்றும் சேமிப்பினை நிர்ணயிக்கும் காரணி களுள் உலர்த்துதல் முக்கியமான ஒன்றாகும். அறுவடையின் போது விதைகளின் ஈரப்பதம் அதிக அளவில் இருக்கும். அதே நிலையில் சேமிப்புக்கு கொண்டு சென்றால் விதையின் தரம் குறைந்துவிடும்.

எனவே விதைகளில் உள்ள ஈரப்பதத்தை பாதுகாப்பான அளவுக்கு (8–12 சதம்) கொண்டு வருவது அவசியமான ஒன்றாகும். ஊலர்த்துதலை பல்வேறு முறைகளில் செய்து விதையிலுள்ள ஈரப்பதத்தைக் குறைக்கலாம்.

இயற்கை முறையில் பயிர் வயலில் இருக்கும்போதே நிலவும் உலர் தட்ப வெப்பநிலையைப் பயன்படுத்தி விதைகளில் உள்ள ஈரப் பதத்தைக் குறைக்கலாம். சூரிய ஒளியைப் பயன்படுத்துதல் அல்லது நிழலில் உலரவைத்தல் மூலம் விதையின் ஈரப்பதத்தை தேவைப் படும் அளவுக்கு கொண்டு வரலாம். இம்முறையில் அடிக்கடி விதைகளை மேல் கீழாக புரட்டி விரைவில் உலர வைக்கலாம்.




செயற்கை முறையில் விதைகளை உலர வைக்க உலர்த் துவான்கள் பயன்படுகின்றன. இம்முறை மிக அதிக அளவு விதை களை விரைவில் உலர்த்த பயன்படுகிறது. மற்றொரு முறையில் கால்சியம் குளோரைடு, கால்சியம் ஆக்ஸைடு, சிலிக்கா ஜெல் போன்ற ரசாயனங்களும் விதை உலர்த்துதலில் பயன்படுத்தப் படுகின்றன. பதப்படுத்துதல் பழம், காய்களைப் பதப்படுத்துதல் என்பது நுண்கிருமிகளிலிருந்து பாதுகாத்து, காய்களையும் சேமித்து வைப்பதாகும்.

பதப்படுத்துதலின் முறைகள் நுண்ணுயிர் பெருக்கத்தை தடுத்தல், அதிக வெப்பத்தில் பதப்படுத்துதல், மிதமான வெப்பத்தில் பதப் படுத்துதல், வேதிப்பொருட்கள் மூலம் பதப்படுத்துதல், உலர வைத்தல், வடிகாட்டுதல், சர்க்கரை மூலம் பதப்படுத்துதல், புளிப் பூட்டுதல், உப்பு மூலம் பதப்படுத்துதல். சிப்பமிடல் விளைபொருளை சிறிய அளவுகளில் சிப்பமிட்டு வைக்கும்போது அவற்றை அடை யாளம் காணுதல், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு கொண்டு செல்லுதல், உபயோகப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் எளிதாக இருக்கும். எனவே தரம் பிரிக்கப்பட்ட விதைகளை சிப்ப மிடுதல் இன்றியமையாததாகும். சிப்பமிடுதலுக்கு பயன்படுத்தப் படும் பொருள், விதையின் தன்மை, சேமிக்கும் கால அளவு, சேமிப்புக் கிடங்கின் அமைப்பு, விதையின் ஈரப்பதம், சிப்பமிடும் பொருளின் விலை ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடும். பொதுவாக சிப்பமிடும் பொருள்

**பின்வரும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.**

காற்று புகும் சேமிப்புக் கலன் – சணல்பை, துணிப்பை, காகிதப்பை காற்று எதிர்ப்பு சேமிப்புகலன் – தடிமனுள்ள பாலித்தீன் உறை கொண்ட சணல்பை காற்று புகா சேமிப்பு கலன்கள் – தகர டின்கள், 700 காஜ் தடிமன் அலுமினியத்தாள் கொண்ட பாலித்தீன் பைகள். சிப்பமிடப் பயன்படும் பொருள் பயிருக்கேற்ப மாறுபடும். எடுத்துக்காட்டாக தானியப்பயிர்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களை சேகரிக்க துணிப்பை மற்றும் சணல் பைகள் ஏற்றது. காய்கறி மற்றும் பூக்களின் விதைகளை சேமிக்க பாலித்தீன் பைகளை பயன்படுத்தலாம். 5 சதம் குறைவான ஈரப்பதம் உள்ள விதைகளை சேமிக்க அலுமினியத்தாள் கொண்ட பாலித்தீன் பைகள் சிறந்தது. இவற்றைத் தவிர தீவனப் பயிர்களை உலர் தீவனம் மற்றும் பசுந்தீவனம் என இருவகைகளில் சேமிக்கலாம்.

தகவல் : **வு.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, வேளாண்மைப் பொறியாளர், உடுமலைப்பேட்டை.**

# இஞ்சி கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்தும் பயனுள்ள உத்திகள்



இஞ்சி என்பது மருத்துவ மற்றும் சமையல் பயன் பாடுகளுக்காகப் பரவலாகப் பயிரிடப்படும் ஒரு நறுமணப் பொருள் ஆகும். இருப்பினும், இதன் உற்பத்தி பல்வேறு நோய்களால் அடிக்கடி பாதிக்கப்படுகிறது. அவற்றுள், கிழங்கு அழுகல் நோய் ஒரு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக உள்ளது.

இந்த நோய் இஞ்சிக் கிழங்குகளை அழுகச் செய்து, விளைச்சல் மற்றும் தரத்தைக் குறைக்கிறது. இந்தப் பிரச்சனையைத் திறம்பட எதிர்கொள்ள, ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை (IDM) அணுகுமுறை அவசியமாகும்.

**அறிகுறிகள்**

● கிழங்கு திசு மென்மையாதல், பெரும்பாலும் நீர் கோர்த்தது போன்ற தோற்றத்துடன் காணப்படும்.

● பாதிக்கப்பட்ட திசு நிறமாற்றம் அடைந்து, பழுப்பு அல்லது கருப்பு நிறமாக மாறும்.

● கிழங்கின் மேற்பரப்பில் அழுகல் அல்லது சிதைவு காணப் படுதல், பெரும்பாலும் துர்நாற்றத்தை வெளியிடும்.

● வெட்டிப் பார்க்கும்போது, திசு மென்மையாகவும், கூழ் போலவும், சிதைந்தும் காணப்படும்.

● பூஞ்சை அல்லது பாக்டீரியா வளர்ச்சி காணப்படுதல், சில நேரங் களில் பூஞ்சை அல்லது பாக்டீரியா கசிவாகத் தெரியும்.

**கலாச்சார நடைமுறைகள்**

● நோயற்ற நடவுப் பொருளைப் பயன்படுத்துங்கள் : ஆரம்பகால தடுப்பூசிகளைத் தடுக்க சான்றளிக்கப்பட்ட மூலங்களிலிருந்து ஆரோக்கியமான, நோயற்ற இஞ்சி வேர்த்தண்டுக்கிழங்குகளைத் தேர்ந்தெடுக்கவும்.

**பயிர் சுழற்சி :** ஆண்டுதோறும் ஒரே வயலில் இஞ்சியை நடுவதைத் தவிர்க்கவும். நோய் சுழற்சியை முறியடிக்க மக்காச் சோளம், பருப்பு வகைகள் அல்லது பிற பொருத்தமான பயிர்கள் போன்ற புரவலன் அல்லாத பயிர்களுடன் பயிர் சுழற்சி செய்யவும்.

**கள சுகாதாரம் :** நோய்க்கிருமி தடுப்பூசிகளைக் குறைக்க பாதிக்கப்பட்ட தாவர குப்பைகள் மற்றும் தன்னார்வ தாவரங்களை அகற்றி அழிக்கவும்.

**முறையான நடவு நடைமுறைகள் :** நீர் தேங்குவதைத் தடுக்க நன்கு வடிகட்டிய மண்ணை உறுதி செய்யுங்கள், இது நோய்க்கிருமி வளர்ச்சிக்கு சாதகமாக உள்ளது. காற்று சுழற்சியை ஊக்குவிக்க போதுமான அளவு தாவரங்களை இடுங்கள்.

**வெள்ளம் :** சில சந்தர்ப்பங்களில், இடைப்பட்ட வெள்ளம் மண்ணில் பரவும் நோய்க்கிருமிகளை அடக்க உதவும்.

**உயிரியல் கட்டுப்பாடு**

**எதிரி நுண்ணுயிரிகளின் பயன்பாடு :** டிரைக்கோடெர்மா ஹார்சியானம், சூடோமோனாஸ் ஃப்ளோரசன்ஸ் அல்லது பேசில்லஸ் இனங்கள் போன்ற நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளைப் பயன் படுத்துவது நோயை உண்டாக்கும் பூஞ்சைகளை அடக்க முடியும்.

**சேதனப் பொருட்கள் :** மண்ணின் ஆரோக்கியத்தை மேம் படுத்தவும் நோயைக் கட்டுப்படுத்தவும் மக்கிய உரம் அல்லது வேப்பம் பிண்ணாக்கு போன்ற சேதனப் பொருட்களை மண்ணில் சேர்க்கவும்.

**இரசாயனக் கட்டுப்பாடு**

**விதை நேர்த்தி :** நடவு செய்வதற்கு முன், கிழங்குகளை கார்பென்டாசிம் அல்லது டிராம் போன்ற பூஞ்சாணக்கொல்லிகளால் நேர்த்தி செய்யவும்.

**மண் நனைத்தல் :** பயிர் வளரும் போது தேவைப்பட்டால், பரிந் துரைக்கப்பட்ட அளவுகள் மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, வேர்ப் பகுதியைச் சுற்றி பூஞ்சாணக்கொல்லிகளைப் பயன்படுத்தவும்.

**ஒருங்கிணைந்த பயன்பாடு :** இரசாயனச் சார்பைக் குறைக்க, இரசாயன சிகிச்சைகளை மற்ற நடைமுறைகளுடன் இணைக்கவும்.

**முடிவுரை :** ஆரோக்கியமான நடவுப் பொருட்கள், சாகுபடி முறை கள், உயிரியல் கட்டுப்பாடு மற்றும் இரசாயனங்களின் விவேகமான பயன்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு அணுகுமுறை, இஞ்சி கிழங்கு அழுகல் நோய்க்கு எதிரான சிறந்த பாதுகாப்பை வழங்குகிறது. இந்த உத்திகளைக் கடைப்பிடிக்கும் விவசாயிகள், நோயின் தாக்கத்தை கணிசமாகக் குறைத்து, ஆரோக்கியமான பயிர்களையும் சிறந்த விளைச்சலையும் பெறலாம்.

தகவல் : **சி.சுபாஷினி, ஆர்.வி.எஸ் பத்மாவதி தோட்டக்கலை கல்லூரி, செம்பட்டி, தமிழ்நாடு – 624 707, சு.சண்முகபாக்கியம், புஷ்கரம் வேளாண் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை, தமிழ்நாடு – 622 303, தி.அனிதா, தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், TNAU, பெரியகுளம், தமிழ்நாடு – 625 604.**

# வசந்தம் அக்ரிடெக்

VASANTHAM Agri Tech

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு,
சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

**கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி**

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்

- 40% - பெரிய விவசாயி
- 50% - பெண்கள் / SC/ST
- 60% - சிறுகுறு விவசாயி
- 70% - சிறுகுறு விவசாயி & SC/ST



Sarathi i06

### மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்

- ஆதார்
- புகைப்படம்
- பட்டா
- அடங்கல்
- சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- சிறுகுறு விவசாயி சான்றிதழ்



Yield max VT 260

### உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்

- மதுரை
- சிவகங்கை
- விருதுநகர்
- ராம்நாடு



Sirachi 8D6

**1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும் சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே**

**இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652**